**27.03.2023**
**OS 4/2020**
**வா.சா.1 சந்திரபிரியா**
**1, 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

இந்த வழக்கு 2004ல் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யப்படும்போது அழகர்சாமி நாயுடு யார் என்று தெரியவில்லை. பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் செய்வதற்கு முன்பாகவே 13.08.1992ல் 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு கார்டியனாக இருந்து பிடாரன் என்பவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரத்தின் பேரில் பிடாரன் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் அ.வ.எண்.76/2001 என்ற அடமானக் கடன் வரக்கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடியானதின் பேரில் பிடாரன் தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் மேல் முறையீடு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 22.08.1991 அன்று பிடாரன் மனைவி அழகம்மாளுக்கு தாவா சொத்துக்களை பொறுத்து ஒரு ஒத்தி பத்திரம் எழுதி தரப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அழகர்சாமி நாயுடு நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே பொன்னாடி என்பவரிடம் இருந்து ரூ.10ஆயிரம் புரோநோட் பேரில் கடன் பெற்று தாவா சொத்தினை பொறுத்து முன்ஜப்தி கோரி இ.ம.எண்.547/1994-ன் அ.வ.எண்.460/1994 என்ற வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் தாக்கல் செய்து மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தால் தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இந்த விவரங்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனவே 2 முதல் 5 பிரதிவாதிகளின் தாவா சொத்துக்களை பொறுத்து உள்ள உரிமையை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மலரணையாக வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின் மூலமாக எந்தவித பிரதிபிரயோஜனமும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து கடனாளிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கானது காலவரையறை சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 6, 7 பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார்கள்

என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி வழக்கின் நீதிமன்ற கட்டணத்தை தவறாக மதிப்பீட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.